செய்தி குறிப்பு–38

## செய்தி வெளியீடு – 7.3.2010

## முதலமைச்சர் கலைஞர் அவர்கள் விடுக்கும் 100வது ஆண்டு உலக மகளிர் தினச் செய்தி!

**டென்மார்க் நாட்டின் தலைநகரான கோபன்ஹேகன் நகரில் 1910ஆம் ஆண்டில் நடைபெற்ற உலகளாவிய பெண்கள் மாநாடு நிறைவேற்றிய தீர்மானத்தின்படி, பெண்களுக்கு வேலை செய்யும் உரிமை, வாக்குரிமை, பயிற்சி பெறும் உரிமை, பொதுஅலுவலகங்களில் பணிபுரியும் உரிமை, பாலின வேறுபாட்டிற்கு முற்றுப்புள்ளி வைத்தல் போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தி 1911ஆம் ஆண்டில் ஆஸ்திரியா, டென்மார்க், ஜெர்மனி, சுவிட்சர்லாந்து போன்ற நாடுகளில் "உலக மகளிர் தினம்" முதல்முதலாகக் கடைப்பிடிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து, ஆண்டுதோறும் மார்ச் மாதம் 8ஆம் நாள் கொண்டாடப்படும் "உலக மகளிர் தினம்" இந்த ஆண்டில் 100வது மகளிர் தினமாக உலகெங்கும் கொண்டாடப்படுகிறது.**

**தமிழகத்தைப் பொறுத்தவரை தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோரின் வழியில் பெண்கள், கல்வி வாயிலாக வேலைவாய்ப்புகள் பெற்றுப் பொருளாதாரத் தன்னிறைவு காண்பதன் மூலமே நாட்டில் உண்மையான சமதர்ம, சமத்துவ சமுதாயம் மலரும் என்ற அடிப்படையில் திராவிட முன்னேற்றக் கழக அரசு பல்வேறு மகளிர் முன்னேற்றத் திட்டங்களைத் தொடர்ந்து நடைமுறைப் படுத்தி இந்தியாவின் மற்ற மாநிலங்களுக்கெல்லாம் முன்னோடியாகத் திகழ்கிறது.**

**1973இல் காவல் துறையில் மகளிர் நியமனம்; 1989 இல் மகளிர் மேம்பாட்டுத் திட்டம்; ஈ.வெ.ரா நாகம்மையார் நினைவு மகளிர் இலவசப் பட்டப் படிப்புத் திட்டம்; 2007 இல் இத்திட்டம் முதுகலைப் பட்டப்படிப்பு வரை நீட்டிப்பு; 1990இல் அரசு வேலைவாய்ப்புகளில் மகளிர்க்கு 30 விழுக்காடு இட ஒதுக்கீடு; பரம்பரைச் சொத்தில் பெண்களுக்குச் சமஉரிமை அளித்திடும் தனிச் சட்டம்; 1996இல் உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு 33 விழுக்காடு இட ஒதுக்கீடு; 2006இல் மாதர் அறிவு வளம்பெற இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள்; நகர்ப்புற சுயஉதவிக்குழுக்களுக்கும் சுழல்நிதி; 2007இல் எரிவாயு இணைப்புடன் இலவச எரிவாயு அடுப்புகள்; மூவலூர் மூதாட்டியார் திட்டம் உட்பட ஏழைப் பெண்களுக்கான பல்வேறு திருமண நிதியுதவித் திட்டங்கள்; ஏழை கர்ப்பிணிப் பெண்களுக்கு 6 ஆயிரம் ரூபாய் வீதம் நிதியுதவி; 50 வயது கடந்தும் திருமணமாகாத ஏழைப் பெண்களுக்கு மாதம் 400 ரூபாய் வீதம் உதவித் தொகை என்பன போலப் பல்வேறு திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு பெண்கள் பயனடைந்து நலம் பெற்று வருகின்றனர்.**

**நூறாவது ஆண்டு உலக மகளிர் தினம் கொண்டாடப்படும் வேளையில், தமிழக மகளிர் அனைவர்க்கும் எனது மனமார்ந்த மகளிர் தின நல்வாழ்த்துகளை உரித்தாக்குகிறேன்.**

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.

*****